அசல் வழக்கு எண்.30/18

நாள் - 26-03-2019

பிடயுள்யு - 2 பிரபாகர்

குறுக்குவிசாரணை

கந்தன் ரவி ஆகியோர் என் தகப்பனாருடன் கூடப்பிறந்தவர் என்பது சரிதான். என் தாத்தா பெய் பெரியசாமி. பெரியசாமியின் சகோதரர் முருகேசன். பிரதிவாதிகள் 1 முதல் 4 பேரும் முருகேசனின் மகன்கள் என்பது சரிதான். என் பெரிய தாத்தா கந்தசாமி என்பவருக்கு பூர்வீக சொத்துக்கள் இருந்தது. பெரியசாமியும், முருகேசனும் தாவாவில் இல்லாத மற்ற சொத்துக்களை தங்களுக்குள் பாகம் பிரித்து கொண்டுள்ளனர். நான் பிறப்பதற்கு முன்பே அவர்களுக்குள் பாகம் பிரிந்திருக்கிறது. நான் பிறப்பதற்கு முன் தாவாவில் இல்லாத நிலங்களும் மற்றும் வீடும் பிரிக்க்ப்பட்டுள்ளது. அவ்வாறு பிரிக்கப்பட்ட நிலங்களுக்கு, முருகேசனுக்கும், பெரியசாமிக்கும் தனித்தனியாக பட்டா கொடுக்கப்பட்டுள்ளது. தாவா சொத்துக்களுக்கு என் தாத்தா பெயரில் பட்டா இருந்தது. தாத்தா இறந்தவுடன் என் அப்பா பெயரிலும், என் சித்தப்பா பெயரிலும் கூட்டாக பட்டா உள்ளது. என் அப்பா பெயரிலும், சித்தப்பா பெயரிலும் கூட்டாக ஏற்பட்ட பட்டாக்கள் என் கைவசம் இல்லை. என் அப்பாவிடம் இருப்பதற்கு வாய்ப்பு உள்ளது. என் அப்பாவிற்கு நான் இன்று சாட்சி சொல்லப்போகும் விவரம் தெரியும். என் சகோதரர் இந்த வழக்கில் சாட்சியம் அளித்து விட்டு சென்றபின் என் அப்பாவிடம் கூட்டுப்பட்டா குறித்து நான் கேட்கவில்லை. முருகேசன் 1970 க்கு முன்பாகவே இறந்துவிட்டார் என்றால் இருக்கலாம். தாவா சொத்துக்களுக்கு நானோ, என் தகப்பனாரோ வாய்தா செலுத்தியுள்ளாரா என்றால், செலுத்தியுள்ளோம். தாவா முதல் அயிட்ட சொத்து எங்கள் அனுவத்தில் உள்ளதா அல்லது முருகேசன் வகையறா அனுபவத்தில் உள்ளதா என்றால், என் அப்பாதான் அந்த சொத்தில்

கூட்டு அனுபவத்தில் உள்ளார். தாவா முதல் அயிட்ட சர்வே எண்ணுக்கு என் அப்பா வாய்தா செலுத்தியிருக்கிறாரா என்றால், தெரியவில்லை. இந்த தாவாவிற்கு முன்பு வில்லங்க சான்று வாங்கி பார்ககவில்லை. 7 ஆம் பிரதிவாதி குணசேகரன் என்பவரை எனக்கு தெரியாது. கிராம நிர்வாக அதிகாரியிடம் சென்று விவரம் கேட்டபோது 7 ஆம் பிரதிவாதி பெயரில் ரெக்கார்டு இருப்பதாக சொன்னார். அதனால், அவரை தரப்பினராக சேர்த்திருக்கிறேன். தாவா 2,3,4 அயிட்ட சொத்துக்களுக்கு குணசேகரன் பெயரில் ரெக்கார்டுகள் உள்ளது. 5,6,7 அயிட்ட சொத்துக்களுக்கு எங்கள் பெயரிலும், முருகேசன் வகையறா பெயரிலும் கூட்டாக உள்ளது. 8வது அயிட்ட சொத்து 1ஆம் பிரதிவாதி சந்திரமோகன் பெயரில் உள்ளது. 9 வது அயிட்ட சொத்து 5,6 பிரதிவாதிகள் பெயரில் உள்ளது. என் பெயரிலும், முருகேசன் வகையறா பெயரிலும் கூட்டாக பட்டா உள்ளது என்று நான் சொல்லியிருப்பதற்கு ஆவணங்கள் எதுவும் நான் வாங்கவில்லை. 9 வது அயிட்ட சொத்து மொத்தம் 9 ஏக்கர் 44 செண்ட் ஆகும். 9 வது அயிட்ட சொத்து மேல்புறமும், கீழ்புறமும் 2 பகுதிகளாக உள்ளது. கீழ்புறத்தில் சுமார் 3 ஏக்கர் நிலம் இருக்கும். மீதி இருக்கும் சுமார் 6 ஏக்கர் நிலம் மேல்புற பகுதியாக உள்ளது. இரண்டு பகுதிகளுக்கும் இடையில் வரப்பு இல்லை. ஆனால் வேலி உள்ளது. அந்த வேலி எனக்கு தெரிந்து 20 வருடங்களாக உள்ளது. அந்த நிலத்திற்கு கேணி இல்லை. வாய்க்கால் பாசனமும் இல்லை. என் தாத்தா காலத்தில் பல சொத்துக்களை பிரித்துகொண்டபோதும் தாவா சொத்துக்களை என் அப்பாவும், முருகேசனும் பிரித்துகொள்ளதாதற்கு என்ன காரணம் என்றால், இந்த சொத்துக்கள் வானம் பார்த்த பூமி என்பதால், பிரித்துகொள்ளவில்லை. முருகேசனுடைய மகன்கள் குணசேகரணை தவிர வேறு யாருக்காவது கிரயம் செய்துள்ளார்களா என்பது எனக்கு தெரியாது. என் தகப்பனாரோ, நாங்களோ தாவாவில் இல்லாத சொத்துக்களை கிரயம் செய்திருக்கிறோமா என்றால் இல்லை. இந்த தாவாவில், குணசேகரனும், முருகேசன் வகையறாவும் என்ன கட்சி எழுதி போட்டுள்ளார்கள் என்பதை பார்த்தேன். முருகேசன் வகையறாவினர் 07-05-2003 ல் ஒரு பதிவு செய்யப்பட்ட பாக ஆவணம் ஏற்படுத்திகொண்டள்ளார்கள் என்ற விவரம் எனக்கு முதலில் தெரியாது. அவர்கள் கட்சியை

படித்து பார்த்துதான் தெரிந்துகொண்டேன். குணசேகரன் பெயரில் கிரயம் உள்ளதா அல்லது அவரது மகன் ராம்குமார் பெயரில் கிரயம் உள்ளதா என்பதையும் , எதிர் வழக்குரையை பார்த்துதான் தெரிந்துகொண்டேன். 4வது அயிட்ட சொத்து 54 செண்ட் என்பது புல எண். 242/ 6 ல் உள்ளதா அல்லது 252/6ல் உள்ளதா என்றால் எனக்கு புல எண் ஞாபகம் இல்லை. முருகேசன் உயிருடன் இருந்த காலத்திலேயே அவரும், பெரியசாமியும் எல்லா சொத்துக்களையும் பாகம் பிரித்துகொண்டனர் என்றால் சரியல்ல. அதனால்தான் தாவா சொத்துக்களுக்கு எங்கள் பொயில் பட்டாவும் வாங்கவில்லை. வாய்தாவும் செலுத்தவில்லை என்றால், சரியல்ல. பெரியசாமிக்கும், முருகேசனுக்கும் பாகம் ஏற்பட்டபின் தாவா சொத்துக்களில் எனக்கு எந்த அனுபவமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சிவகங்கை மாவட்டத்தில் அரசாங்க ஒப்பந்த ஊரியராக வேலை பார்க்கிறேன். 4 வருடங்களாக வேலை பார்க்கிறேன். முதலில் திருச்சியில் வேலை பார்த்தேன். தற்போது 7 மாதங்களாக சிவகங்கையில் வேலை பார்க்கிறேன். நான் விவசாயம் ஏதும் செய்வது இல்லை. தாவா சொத்துக்களில், வானம் பார்த்த பூமி என்பதால், எனக்கு நினைவு தெரிந்து எந்த விவசாயமும் செய்யப்படுவது இல்லை. எனக்கு சொத்தில் பாத்தியமும், அனுபவமும் இல்லாத காரணத்தால், விவசாயம் எதுவும் செய்வதில்லை என்றால் சரியல்ல. நான் எதற்காக வி எ ஓ வை பார்த்தேன் என்றால், முருகேசன் மக்களுடன் தாவா சொத்துக்களை பொருத்து பாகம் பிரித்துகொள்ளலாம் என்று போய் பார்த்தேன். 7, 8 வருடங்கள் முன்பு முருகேசன் மக்களிடம் பாகம் பிரித்து தரும்படி கேட்டேன். அவர்கள் சரி என்று சொன்னபிறகுதான் வி எ ஓ வை போய் பார்த்தேன். நான் முருகேசன் வகையறாவை போய் பார்த்தது 2003 ஆம் வருடத்திற்கு பிறகுதான். 2003 ஆம் வருடத்திலேயே முருகேசன் வகையறாவிற்கு அவர்களுக்குள் பாகம் பிரிந்துவிட்டது என்றாலும், நான் வழக்கிற்காக முருகேசன் வகையறா எங்களுடன் பாகம் பிரித்துகொள்ள பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.